DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II, RAMANATHAPURAM

**C.C.No. 266/2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | LW1 as PW1 | | | |
| Name | : | கருப்பையா | Age | : | 55 |
| S/o | : | சின்னையா | Occupation | : | கூலிவேலை |
| Village | : | வீரபாண்டியன்வலசை | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 23rd day of January 2026.

**23.01.2026**

**(1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி மனுவின் பெயரில் ஆஜராகவில்லை).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் வீரபாண்டியன் வலசையில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். சுமார் 6 மாதத்திற்கு முன்பு நான் இராமநாதபுரம் அருகே நின்றுகொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத நபர்கள் எனது ரூபாயை பறித்து சென்றார்கள். அவர்கள் யாரென்று தெரியவில்லை. சந்தேகத்தின் பேரில் காவல்நிலையம் சென்றேன். அவர்கள் என்னிடம் கையெழுத்து மட்டும் வாங்கினார்கள். புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பணத்தை நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். (**அதற்கான புகைப்படம் மற்றும் சிடி (4 புகைப்படம் மற்றும் 1 சி.டி) அ.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). வழக்குப்பற்றி எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 13.03.2025ம் தேதி மதியம் 01.30 மணியைப்போல நானும், சின்னச்சாமி மற்றும் ஜெகதீசன் ஆகியோர்களுடன் இருசக்கர வாகனத்தில் ஆர்.எஸ் மடை அருகே வந்துகொண்டிருந்தபோது எதிரிகள் இருவரும் ஒருவருக்கு கொடுக்க வைத்திருந்த ரூ. 20,000/-பணத்தை பறித்து என்னை அசிங்கமாக பேசி, குத்தி கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள் என்றால் சரியல்ல. 2ம் எதிரி ரூ. 20,000/-த்தை பறித்துகொண்டு தள்ளிவிட்டு கம்மாய்குள் விழுந்து ஓடிவிட்டார் என்றால் சரியல்ல. அருகில் என்னுடன் இருந்த மூன்று பேரும் அவர்களை விலக்கிய போது அவர்கள் ஓடிவிட்டார்கள்

என்றால் சரியல்ல. அதன்பிறகு காவல்நிலையம் சென்று எதிரிகள் மீது புகார் கொடுத்தேன் என்று போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–இல்லை**

**மறுவிசாரணை – இல்லை**

SUJITH

Digitally signed by SUJITH
Date: 2026.01.23 19:47:11 +0530